# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/37 - 2022 දෙසැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.15

*2310/37 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2012* (V)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டத்தின் பிரிவு 61(1) (துஎ, துஏ) மற்றும் (ந) என்பதன் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
*கடற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2022, திசெம்பர் 14 ஆந் திகதி.*

**ஒழுங்குவிதிகள்**

*2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டின் ஆழ்கடலில் செயற்படும் மீன்பிடிப் படகுகளுக்கான செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமையை (ககமு) நடைமுறைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :*

*1.* அதன் 1 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் இலங்கையின் நீர்ப்பரப்புகளிலும் ஆழ்கடலிலும் தொழிற்படுகின்ற மீன்பிடிக் கலன்களுக்கான செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமையையும் (ககமு) மற்றும் வேறு இலத்திரனியற் கலம் கண்காணிக்கும் முறைமைகளையும் நடைமுறைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப் படலாம்" ;

*2.* அதன் பதிலீடு செய்யப்பட்ட 1 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"**பாகம் I**

**செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமை (ககமு)**" ;

3. அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"2. எவையேனும் பலநாள் மீன்பிடிக் கலன்கள் (இதனகத்துப் பின்னர் "திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களத்தின் (இதனகத்துப் பின்னர் "ககநி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தரையமைந்த கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்தினால் தடந்தொடரப்படுதலையும் அடையாளங் காணப்படுதலையும் அனுமதிக்கின்றதாக அத்திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும் கலத்தின் மீதானதும் (இதனகத்துப் பின்னர் ஒரு "ககமு கருவி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமைக் கருவி அத்தகைய கலத்தில் பொருத்தப்பட்டிருந்தாலொழிய, ஆளொருவர் அத்தகைய கலத்தை மீன்பிடித்தலில் மற்றும் கடற்றொழிலுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் மற்றும் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்குச் சேவையிலீடுபடுத்துதலாகாது ;

4. பதிலீடு செய்யப்பட்ட 2 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்து அதன் 2அ என்னும் ஒழுங்குவிதியாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"2அ. ஏதேனும் பலநாள் மீன்பிடிக் கலம், கலத்தின் மீது முழுமையாகத் தொழிற்படுகின்ற ககமு கருவியை அது கொண்டிருந்தாலொழிய, பணிப்பாளர் தலைமையதிபதி ஏதேனும் கலத்தின் பதிவை, பதிவின் புதுப்பித்தலை, கலத்தின் கைமாற்றத்தை அல்லது புறப்படுகைக்கான அங்கீகாரத்தை அதற்கு வழங்குதலாகாது." ;

5. ஒழுங்குவிதி 2அ என்பதை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"தலைவர், பொறுப்பாளர், பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது உரிமக்காரரின் பொறுப்புக்கள்

"3. ஏதேனும் பலநாள் மீன்பிடிக் கலத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், அக்கலத்தின் மீது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவொரு ககமு கருவியை நிறுவுதல் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்கு விதிகளின் பாகம் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர்களிடமிருந்து மட்டுமே பேணுகை, பழுதுபார்ப்பு போன்ற சேவைகளையும் மற்றும் ககமுவின் ஏனைய சேவைகளையும் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்" ;

6. (அ) ஏலவேயுள்ள அதன் 3 ஆம் ஒழுங்குவிதியை 3அ என்னும் ஒழுங்குவிதியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(ஆ) மீள இலக்கமிடப்பட்ட 3அ என்னும் ஒழுங்குவிதியில் "மீன்பிடிக் கலத்தின் பொறுப்பாளர், உரிமையாளர் அல்லது உரிமக்காரர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மீன்பிடிக் கலத்தின் பொறுப்பாளர், பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது உரிமக்காரர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :-

7. மீள இலக்கமிடப்பட்ட 3அ என்னும் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"3ஆ. ஏதேனும் மீன்பிடிக் கலத்தின் தலைவர், பொறுப்பாளர், பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது உரிமக்காரர், அக்கலத்தின் மீதுள்ள ககமு கருவியானது, 3அ என்னும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தகவல் அல்லது தரவு அத்தகைய கலத்தின் மீதுள்ள ககமு கருவியினூடாக இலகுவாகப் பெற்றுக்கொள்ளப்பட முடியுமானவொரு முறையில் பேணப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3இ. ஏதேனும் மீன்பிடிக் கலத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது உரிமக்காரர், கலத்துக்காகத் தேவைப்பட்ட சேவைகளையும் பழுதுபார்ப்புகளையும் பெற்றுக்கொள்வதற்கென இவ்வொழுங்கு விதிகளின் பாகம் III இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட இயைபானவொரு பேணுகை வழங்குநருடன் ஒருங்கிணைவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

3ஈ. ஏதேனும் மீன்பிடிக் கலத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது உரிமக்காரர், கலத்தைக் கண்காணிப்பதற்குக் ககநி யை இயலச்செய்கின்ற இடையீடில்லாத செய்மதிச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கென உரிய நேரத்தில் இயைபான செய்மதித் தரவு விதிப்பனவுகளைத் தீர்த்துவைத்தல் வேண்டும்.

3உ. ஏதேனும் மீன்பிடிக் கலத்தின் தலைவர், பொறுப்பாளர், பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது உரிமக்காரர் கலத்தின் மீதுள்ள ககமு கருவியானது எல்லா நேரங்களிலும் முழுமையான தொழிற்பாடுசார் ககமு கருவியாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் ஆளெவரும், கலத்தின் மீது நிறுவப்பட்ட ககமு கருவியை அழித்து விடுதலோ, சேதப்படுத்துதலோ, அதனைத் தொழிற்பட முடியாததாக்குதலோ அல்லது வேறு வகையில் அதனோடு தலையிடுதலோ ஆகாது ; அத்துடன் அக்கருவி தொடர்பான பின்வரும் செயற்பாடுகள் கண்டிப்பாகத் தடை செய்யப்படுகின்றன :-

(அ) கலம் கண்காணிக்கும் முறைமை (ககமு) தரவை ஏதேனும் முறையில் மாற்றுதல் ;

(ஆ) ககமு கருவியுடன் தொடுக்கப்பட்ட உணர்கொம்புக்கு அல்லது உணர்கொம்புகளுக்குக் கைப்பாடாக முட்டுக்கட்டையிடுதல் ;

(இ) ககமு கருவிக்கான மின்வழங்குகையைக் கைப்பாடாக இடையீடு செய்தல் ; அத்துடன்

(ஈ) திணைக்களத்தின் ககநி இடமிருந்தான முன்னங்கீகாரமின்றி மீன்பிடிக் கலத்திலிருந்து ககமு கருவியை அகற்றுதல் அல்லது கலத்தில் நிறுவப்பட்ட நிலையிலிருந்து மாற்றுதல்.

3ஊ. ஒரு மீன்பிடிக் கலத்தின் பொறுப்பாளர் அல்லது தலைவர், ககமு கருவியினூடாகவும் அதன் ககநி ஊடாகவும், மீன்பிடிக் கலமொன்று பின்வருவனவற்றினுட் பிரவேசிக்கும் மற்றும் அங்கிருந்து வெளிச்செல்லும் திகதியையும் நேரத்தையும் கண்காணிப்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் :-

(அ) நீர்ப்பரப்புகளுக்கும் வளங்களுக்குமான அணுக்கம் பற்றிய குறித்த விதிகள் ஏற்புடையனவாகின்ற ஏதேனும் கடலோர இடப்பரப்பு ;

(ஆ) பிராந்தியக் கடற்றொழிற் கடலோர ஒழுங்கமைப்பின் ஒழுங்குபடுத்தும் இடப்பரப்புகள் ;

(இ) வேறேதேனும் அரசின் நியாயாதிக்கஞ்சார் நீர்ப்பரப்புகள் ;

(ஈ) திணைக்களத்தினால் பெயர் குறிக்கப்படக்கூடியதும், மட்டுப்படுத்தப்பட்ட அல்லது வேறு வகையிலானதுமான வேறேதேனும் இடப்பரப்பு.

3எ. மட்டுப்படுத்தப்பட்ட ஏதேனும் கடல்சார் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பிற்கு அல்லது இடப்பரப்புகளிற்கு இருபது கடல்மைல்கள் வரை நெருங்கிய அண்மையில் தொழிற்படுகின்ற ஏதேனும் மீன்பிடிக் கலம் அல்லது அத்தகைய அண்மையில் இருக்கும் இடைப்பெயர்விலுள்ள ஏதேனும் கலம், ஒரு மணிநேரக் கால இடைவெளிகளில் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி தகுதியானதெனக் கருதுகின்றவாறாக முடிபுசெய்யப்பட்ட வேறேதேனும் காலஇடைவெளியில் கண்காணிக்கப்படுதல் வேண்டும் .” ;

8. முற்போந்த 3எ என்னும் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் தலைப்பை உட்புகுத்துவதன் மூலமும் :-

“ககநி இன் பொறுப்புக்கள்” ;

9. அதன் 4 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உப ஒழுங்குவிதியை நீக்குவதன் மூலமும் ;

10. அதன் 8 ஆம் ஒழுங்குவிதியின் (i) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

“(i) மென்பொருளையும் செய்மதிச் சேவையையும் கண்காணிக்கின்ற கலம் தகுந்த முறையில் பணியாற்றுவதனை உறுதிப்படுத்துதல் ;” ;

11. அதன் 8 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் :-

“8அ. ககநி ஆனது-

(அ) முறைமையிலுள்ள அபாய மீன்பிடிக் கலன்களை நெருக்கமாகக் கண்காணிப்பதனை இயலச்செய்து அத்தகைய கலன்களைத் தலைக்கயிறு மூலம் அடையாளங்காணுதல் வேண்டும் ;

(ஆ) பிடிக்கப்பட்ட மீன்களின் தரவு நிலைமையைச் சரிபார்த்தல், தேடுகை மற்றும் மீட்புத் தொழிற்பாடுகள், ஏதேனும் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத செயற்பாட்டைக் கண்டுபிடித்தல் மற்றும்

கடற்றொழில் திணைக்களத்தினுள்ளான வேறெவையேனும் புலனாய்வுகள் என்னும் நோக்கத்துக்காகக் கலம் தடந்தொடரல் தரவை வழங்குதல் வேண்டும் ;

(இ) ககமு தரவுத்தளத்திலிருந்து மத்தியமயமாக்கப்பட்ட தரவுத்தளத்துக்கும் கடற்றொழில் திணைக்களத்தினால் அலுவலக முறையில் நடாத்தப்பட்ட தகவல் முகாமை முறைமைக்கும் நேரடி அணுக்கத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஈ) ஏதேனும் மீன்பிடிக் கலத்திலிருந்து பெறப்பட்ட தரவு பதியப்பட்டு, குறைந்தபட்சம் ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு காலப்பகுதிக்கு ஒன்றில் மென்பிரதிகளில் அல்லது வன்பிரதிகளில் பேணிக்காக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்." ;

12. அதன் 9 ஆம் ஒழுங்குவிதியில் "உரிமையாளர்", "உரிமையாளரால்" மற்றும் "எஸ்எஸ்பி வானொலி போன்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்", "பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரால்" மற்றும் எஸ்எஸ்பி வானொலி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலத்திரனியல் முறையினூடாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

13. அதன் 10 ஆம் ஒழுங்குவிதியில் "திணைக்களத்தின் ககநி யைத் திருப்திப்படுத்தும் விதத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முழுமையான தொழிற்பாடுசார் ககமு கருவியொன்றாக அது சேவையாற்றுவதனை இயலச்செய்யும் விதத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

14. அதன் 11 ஆம் ஒழுங்குவிதியில் "கண்காணிப்புக் கருவியெதுவும்" மற்றும் "திணைக்களத்தின் "ககநி" இனால் எழுத்துமூல அதிகாரமளிப்பு வழங்கப்படும்வரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "ககமு கருவியெதுவும்" மற்றும் "பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டாலொழிய" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

15. அதன் 12 ஆம் ஒழுங்குவிதியை நீக்குவதன் மூலமும் ;

16. அதன் 13 ஆம் ஒழுங்குவிதியில் "தலைவர் அல்லது உரிமையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தலைவர் அல்லது பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

17. அதன் 14 ஆம், 15 ஆம் ஒழுங்குவிதிகளை நீக்குவதன் மூலமும் ;

18. அதன் 19 ஆம் ஒழுங்குவிதியை நீக்குவதன் மூலமும் ;

19. அதன் 20 ஆம் ஒழுங்குவிதியை நீக்குவதன் மூலமும் ;

20. நீக்கப்பட்ட 20 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

**"பாகம் II"**

**தன்னியக்க அடையாளங்காண் முறைமைகளும் வேறு இலத்திரனியல் கண்காணிப்பு முறைமைகளும்**

20. தொழிற்பாடுசார் நோக்கங்களுக்காக, கலத்தின் மீது கட்டாயமான ககமு வுக்கு மேலதிகமாக (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "தஅமு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் தன்னியக்க அடையாளங்காண் முறைமையை அல்லது வேறேதேனும் இலத்திரனியல் முறைமையைப் பயன்படுத்துவதற்கு உட்கருதுகின்ற ஏதேனும் மீன்பிடிக் கலத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், இவ்வொழுங்குவிதிகளின் பாகம் III இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் சேவை வழங்குநர்களிடமிருந்தும் அத்தகைய கருவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

21. மீன்பிடிக் கலத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், தன்னியக்க அடையாளங்காண் முறைமையானது (தஅமு) கலத்தின் மீது நிறுவப்படும்போது அத்தகைய கருவியின் தனித்துவமான தொடரிலக்கத்தைக் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களத்துக்கு வழங்குதல் வேண்டும்.

22. மீன்பிடிக் கலன்களுக்கான தன்னியக்க அடையாளங்காண் முறைமையினதும் பல்லிணைக் குறியிடும் மிதவைகளுக்கான தன்னியக்க அடையாளங்காண் முறைமையினதும் (தஅமு) தனித்துவமான தொடரிலக்கம் முறையே பின்வரும் படிவத்திலிருத்தல் வேண்டும் :-

(i) [417] [கலத்தின் பதிவிலக்கத்திலான எண்கள்] [மாவட்டத் தொலைபேசிக் குறியீட்டின் கடைசி இரண்டு இலக்கங்கள்]

(ii) [99] [417] [நான்கிலக்கத் தொடரிலக்கம்] ;

23. ஆளொருவர் பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் தவிர, ஒரு மீன்பிடிக் கலம் தொடர்பில் பயன்படுத்தப்பட்ட தன்னியக்க அடையாளங்காண் முறைமைக் கருவிகளை, வேறு இலத்திரனியல் கண்காணிப்பு முறைமைகளை அல்லது பல்லிணைக் குறியிடும் மிதவைகளுக்கான தன்னியக்க அடையாளங்காண் முறைமைகளை வேறொரு மீன்பிடிக் கலத்துக்குக் கைமாற்றுதலாகாது.

24. ஒரு மீன்பிடிக் கலத்தின் தலைவர், பொறுப்பாளர், பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் அல்லது உரிமக்காரர், தன்னியக்க அடையாளங்காண் முறைமை மிதவைகள் வேறு அரசின் ஏதேனும் மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்புக்கு, புறநீங்கலான பொருளாதார வலயத்துக்கு (புபொவ) நகர்தல், தன்னியக்க அடையாளங்காண் முறைமைப் பல்லிணைக்குறிப்பான்கள் தவறவிடப்பட்டமை அல்லது இழக்கப்பட்டமை என்பன பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் எழுபத்திரண்டு (72) மணித்தியாலங்களினுள் அதனைத் தொடர்பறுத்தலும் வேண்டும் ; அத்துடன் கலமானது பதிவகற்றப்படும், கைமாற்றப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் பட்சத்தில் தன்னியக்க அடையாளங்காண் முறைமைக் குறியீட்டை அழித்துவிடுதல் வேண்டும் அல்லது தன்னியக்க அடையாளங்காண் முறைமைக் கருவியைக் கலத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

25. மீன்பிடிக் கலத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், மீன்பிடிக் கலத்தின் ஏதேனும் பதிவை அகற்றும், அதனைக் கைமாற்றும் அல்லது விற்பனை செய்யும் பட்சத்தில், 24 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடப்படாத வேறு இலத்திரனியற் கண்காணிப்புக் கருவிகளையும் இயைபான மென்பொருள்களையும் மீன்பிடிக் கலத்திலிருந்து தொடர்பறுத்தல் வேண்டும்.

## பாகம் III

### வழங்குநர்களையும் சேவை வழங்குநர்களையும் பதிவுசெய்தல்

26. இவ்வொழுங்குவிதிகளின் பாகம் I மற்றும் பாகம் II என்பவற்றிற் குறிப்பீடு செய்யப்பட்ட செய்மதி அடிப்படையிலான கலம் தடந்தொடர்தற் கருவிகளையும் வேறு இலத்திரனியல் கண்காணிப்புக் கருவிகளையும் வழங்குவதற்கும் அத்தகைய கருவிகள் தொடர்பாகப் பேணுகைச் சேவைகளை அளிப்பதற்கும் உட்கருதுகின்ற எவரேனுமாள் முறையான நோக்கங்களுக்காகக் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களத்துடன் பதிவுசெய்தல் வேண்டும்.

27. இருபத்தாறாம் பிரிவின்கீழ் பதிவுசெய்வதற்கு உட்கருதுகின்ற ஆளொருவர், அத்தகைய விண்ணப்பத்தைப் பத்தாயிரம் ரூபாவான (ரூ. 10,000.00) பதிவுக் கட்டணத்துடன் சேர்த்து, இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

28. பணிப்பாளர் தலைமையதிபதி, தயாரிப்புகளின் தொழினுட்ப மதிப்பீடொன்றைச் செய்த பின்னர், இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தின்படி கலம் தடந்தொடர்தல் கருவிகளின் வழங்குகைக்கான பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

29. இருபத்தெட்டாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ், 27 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுக் கட்டணத்துடன் சேர்த்து அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீது பதிவைப் புதுப்பித்தலுக்கமைய, வழங்குகைத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

30. இருபத்தெட்டாம் ஒழுங்குவிதியின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கலம் தடந்தொடர்தல் கருவியானது, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட மென்பொருள் மற்றும் வேறு சேவைகளை ஒத்திருத்தல் வேண்டுமென்பதுடன் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களம் ஒரு நிருவாகப் பயன்படுத்துநர் தத்துவத்துடன் மென்பொருள் இடைமுகப்பினூடாகச் செயலூக்கிகளைக் கண்காணிப்பதற்கு அணுக்கத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

31. பணிப்பாளர் தலைமையதிபதி, 28 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் பதிவுச் சான்றிதழொன்றுடன் வழங்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களின் நாளதுவரையாக்கப்பட்ட நிரலொன்றை, அவர்களினால் வழங்கப்பட வேண்டிய சாதனங்களினதும் சேவைகளினதும் விபரங்களுடன் சேர்த்து, வெளியிடுதல் வேண்டும்.

**பாகம் IV**

**சேவை வழங்குநர்களின் பதிவை இல்லாதாக்குதல்**
***(ககமு/தஅமு/வேறு இலத்திரனியற் கண்காணிப்புக் கருவிகள்)***

32. பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளின் 28 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் அவரினால் வழங்கப்பட்ட பதிவொன்றை, சேவை வழங்குநர்-

(1) இவ்வொழுங்குவிதிகளின் பாகம் III இன் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறியுள்ளார் ;

(2) இவ்வொழுங்குவிதியின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார், என அவர் திருப்திப்படின், இல்லாதாக்குதல் வேண்டும்.".

(21) "கலம்" என்னும் சொல் இவ்வொழுங்குவிதிகளில் காணப்படும் இடங்களில் எல்லாம் அதற்குப் பதிலாக "மீன்பிடிக் கலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(22) (அ) அதன் 21 ஆம் ஒழுங்குவிதியை 33 ஆம் ஒழுங்குவிதியாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;
(ஆ) மீள இலக்கமிடப்பட்ட 33 ஆம் ஒழுங்குவிதியில்,

(i) "மீன்பிடி தொடர்பான செயற்பாடுகள்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"மீன்பிடிக் கலம்" என்பது, மீன்பிடித்தலுக்காக அல்லது மீன்பிடித்தலுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்தப்படுவதற்குச் சாதனமிடப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் கலம், கப்பல் அல்லது படகு என்று பொருளாகும் ;

(ii) "மீன்பிடிக் கலம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"முழுமையான தொழிற்பாடுசார் கலம் கண்காணிப்பு முறைமை (ககமு) கருவி" என்பது, முட்டுக்கட்டையற்ற மின்சக்தி வழங்குகையுடனும் செய்மதித் தொடுப்புடனும் ஏதேனும் தொழினுட்ப முறிவின்றிப் பணியாற்றுகின்றதும் கலம் கண்காணிப்பு முறைமைகள் மென்பொருள் இடைமுகப்பின் மீது புலப்படத்தக்கதுமான கலம் கண்காணிப்பு முறைமைகள் அலைவாங்கி செலுத்தி மற்றும் கலத்தின் மீதுள்ள அதன் எல்லாத் துணைப்பொருட்களும் என்று பொருளாகும் ;

(iii) "சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"வேறு இலத்திரனியற் கண்காணிப்புக் கருவிகள்" என்பது, மூன்றாந்திறத்தவரொருவரினால் கருவியானது கண்காணிக்கப்படுவதனை இயலச்செய்து கருவியின் அடையாளத்தின் மீது ஓர் இலத்திரனியற் படிவத்தில் தகவலை வெளிப்படுத்த முடியுமானவையான சாதனங்கள் அல்லது இணைந்த மென்பொருள் என்று பொருளாகும் ;

(iv) "துறைமுகம்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"அபாயக் கலம்" என்பது, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் மீறுகின்ற இயல்திறனைக் கொண்டுள்ள கலத்தைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்பட்ட மீறுகைகளின் வரலாற்று அடிப்படையின் மீது அடையாளங் காணப்படுகின்ற ஒரு கலம் என்று பொருளாகும் ;

(v) அவ்வொழுங்குவிதியில் "கலம்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்குவதன் மூலமும் ;

(23) அதன் அட்டவணை II டை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணைகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

***ஒழுங்குவிதி 27***

## *அட்டவணை* III

**இலங்கையின் நீர்ப்பரப்புகளிலும் ஆழ்கடலிலும் தொழிற்படுகின்ற மீன்பிடிப் படகுகளுக்காகச் செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமை (ககமு) மற்றும் வேறு இலத்திரனியற் கண்காணிப்பு வரைவாவணங்களின் வழங்குகைக்காகப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்.**

அ. கலன்களின் வழங்குநர் பற்றிய விபரங்கள்

1. உள்நாட்டுக் கம்பெனியின் பெயர்;
2. முகவரி;
3. கம்பெனிப் பதிவில்;
4. சேபெவ பதிவில்;
5. பிரதான தொடர்பாளரின் பெயரும் பதவிப்பெயரும்;
6. பிரதான தொடர்பாளரின் தொலைபேசி இலக்கம்;
7. பிரதான தொடர்பாளரின் மின்னஞ்சல் முகவரி;

ஆ. கருவிகளினதும் தொடர்புபட்ட சேவைகளினதும் அடிப்படை அளவுக்குறிப்பீடுகள்

1. கருவியின் பெயர் (தயாரிப்பும் மாதிரியும்);
2. தோற்றுவாய் நாடு;
3. உற்பத்தி நாடு;
4. உற்பத்தி ஆண்டு;
5. மென்பொருள் இடைமுகப்பு விபரங்கள்;

இ. சேவைத் தகவல்

1. நம்புறுதி;
2. விற்பனைகளுக்குப்பின்னரான சேவைகள்;
3. இலங்கையில் சேவைத்தலம் கிடைக்கக்கூடியமை;
4. உதிரிப்பாகள் கிடைக்கக்கூடியமை;
5. முன்னாள் கையிருப்பு கிடைக்கக்கூடியமை;

ஈ. மீனவர் இலக்குத்தொகுதியினரின் விபரங்கள் (உ. ம். படகு உரிமையாளர், பொறுப்பாளர்கள் முதலியோர்)

உ. ஆகுசெலவிடல் விபரங்கள்

1. கருவியின் ஆகுசெலவு (இறக்குமதி, அங்கீகாரம், இடப்பெயர்வு முதலியன உட்பட)
2. நிறுவுகைக்கான ஆகுசெலவு;
3. மென்பொருள் மற்றும் தொகுப்பு விதிப்பனவுகள்; (பேணுகை, தரமுயர்த்தல் முதலியன உட்பட);
4. செயலூக்க விதிப்பனவுகள் (உ. ம். PSA/ TRC முதலியன);
5. வேறேதேனும் விதிப்பனவு;

ஊ. விண்ணப்பத்துக்கான இணைப்புக்கள்

1. பயன்படுத்தப்பட வேண்டிய கருவிகள், மென்பொருள் மற்றும் தொடர்பாடற் சேவைகளுக்கான விபர அளவுக்குறிப்பீட்டுத தாள்கள்;
2. நிறுவுகை, செயலூக்கம் மற்றும் பேணுகைத் திட்டமும் முறைமையியலும் (இந்த ஆவணத்துக்கான தனிவேறான ஓர் இணைப்பாக வழங்கப்படுதல் வேண்டும்);
3. கொடுப்பனவுச் சேகரிப்பு மற்றும் கைமாற்றமுறைமையியல் (இந்த ஆவணத்துக்கான தனிவேறான ஓர் இணைப்பாக வழங்கப்படுதல் வேண்டும்);
4. செய்மதி விதிப்பனவுகளுக்கான நடப்பு விலைகளும் விலைமாற்றற் கொள்கையும் (இந்த ஆவணத்துக்கான தனிவேறான ஓர் இணைப்பாக வழங்கப்படுதல் வேண்டும்);

5. தரவுப் பகிர்வு முறைமையியலும் தரவுப் பகிர்வுக் கொள்கையும் (இந்த ஆவணத்துக்கான தனிவேறான ஓர் இணைப்பாக வழங்கப்படுதல் வேண்டும்);

6. சேவையிலீடுபடுத்தப்படவேண்டிய தொழினுட்பக் குழுவினரின் விபரங்கள் (இந்த ஆவணத்துக்கான தனிவேறான ஓர் இணைப்பாக வழங்கப்படுதல் வேண்டும்);

7. முழுத்தீவிலும் அளிக்கப்பட்ட சேவையினால் மேவப்படவேண்டிய மாவட்டங்களின் நிரல் (இந்த ஆவணத்துக்கான தனிவேறான ஓர் இணைப்பாக வழங்கப்படுதல் வேண்டும்);

8. கடற்றொழிற் கண்காணிப்பு நிலையத்துக்கு (கநீஉ திணைக்களத்திலுள்ள ககநி) வழங்கப்படவேண்டிய வசதிகளின் விபரங்கள் (உ. ம். கண்காணிப்புத் திரைகள், க்ளவுட் அல்லது சேவர் வசதி) (அவர்களின் படகுகள் முதலியவற்றின் இலவசப் பதிகையும் கண்காணிப்பும்);

9. மீனவர்களுக்கு/படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வசதிகள்;

**ஒழுங்குவிதி 28**

## அட்டவணை IV

### பதிவுச் சான்றிதழ்

இலங்கையின் நீர்ப்பரப்புகளிலும் ஆழ்கடலிலும் தொழிற்படுகின்ற மீன்பிடிக் கலன்களுக்கான செய்மதி அடிப்படையிலான கலம் கண்காணிக்கும் முறைமையை (ககமு) மற்றும் வேறு இலத்திரனியற் கண்காணிப்பு வரைவாவணங்களை நடைமுறைப்படுத்தல்

அ. சேவை வழங்குநர் பற்றிய விபரங்கள்
1. உள்நாட்டுக் கம்பெனியின் பெயர்;
2. முகவரி;
3. கம்பெனிப் பதிவில்;
4. சேபெவ பதிவில்;
5. பிரதான தொடர்பாளரின் பெயரும் பதவிப்பெயரும்;
6. பிரதான தொடர்பாளரின் தொலைபேசி இலக்கம்;
7. பிரதான தொடர்பாளரின் மின்னஞ்சல் முகவரி;

ஆ. அதிகாரமளிக்கப்பட்ட சேவைபற்றிய விபரங்கள்
1. கருவியின்/கருவிகளின் பெயர்;
2. தயாரிப்பும் மாதிரியும் /மாதிரிகளும்;
3. மென்பொருள் (பதிப்பு);
4. தொடர்பாடல் வழி (ஏற்புடையதாயின்);

இ. இலக்குத் தொகுதியினர்–

மேலேயுள்ள சேவை வழங்குநர் (விபரங்கள் அ வின்கீழ் தரப்பட்டுள்ளன) இலங்கையின் கடற்றொழில் துறைக்காக மேற்குறிப்பிடப்பட்ட சேவையை அல்லது பண்டங்களை ( விபரங்கள் ஆ வின்கீழ் தரப்பட்டுள்ளன) அளிப்பதற்கும் வழங்குவதற்கும் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றார்.

............................................ இலிருந்து செல்லுபடியாகும்
.............................................. வரை செல்லுபடியாகும்

அதிகாரமளித்தவர்

பணிப்பாளர் தலைமையதிபதி
கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களம்

EOG 12 - 0161

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.